

**Vol.30 | No. 4| APRIL 2026**

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



HAPPY EASTER - THE RESURRECTION OF OUR LORD

**MARCH 30**

VESTITION & MINOR ORDERS AT MINOR SEMINARY



**MARCH 31**

DIACONATE ORDINATION AT MANJALUMOODU



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 30 No :4 APRIL2026



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 04 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 08 |
| இல்வாழ்வு இயக்கம் | 09 |
| வின்செண்ட் தே பவுல் | 10 |
| மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு | 12 |
| உறவிய மலர் | 14 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 16 |
| நலவாழ்வு பணிக்குழு | 18 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 19 |
| மறைமாவட்ட செய்திகள் | 20 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 22 |
| மறைவட்ட செய்திகள் | 24 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 39 |
| MONTHLY AGENDA - APRIL 2026 | 41 |
| BISHOP'S ENGAGEMENTS - APRIL 2026 | 43 |

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Thomas Kuzhikodil**
Associate Editor
**Mr. S.M.Edwinson**
Published by:
**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Mary Jency V.M**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/180/2026**

**Dear Readers,** **31 March 2026**

As we prepare to celebrate the glorious mystery of the Resurrection of Our Lord Jesus Christ, I greet each of you with joy and pastoral fraternity from the Bishop's House, Thuckalay. Easter is the living heartbeat of our faith, the foundation of our priestly vocation, and the inexhaustible spring from which our apostolic zeal flows. I invite each of you to reflect on what Easter truly meant for **three witnesses who stood at the very threshold of the Resurrection: St Mary Magdalene, the Disciples, and our Blessed Mother Mary.** In their experience, may we discover the deeper meaning of our own Easter faith and the joy of our priestly mission.

## From Grief to Encounter

St Mary Magdalene holds a unique place in the Easter story. While many had fled and fear had silenced voices, she remained weeping at the tomb - not for lack of courage, but because she loved deeply. From her, seven demons had been cast out (Lk 8:2); she had been restored from fragmentation to wholeness. And now, the One who had given her life back seemed to have been taken away forever.

"Woman, why are you weeping? Whom are you looking for?" (Jn 20:15). These words, initially mistaken for those of a gardener, are the most tender question the Risen Lord could ask. Easter began for Mary not in triumph but in tears. She sought the dead Christ; she had not yet imagined the living One. This is a profoundly human condition: we often seek God in the familiar, in what we can see and verify. Yet the Risen Lord shatters every such expectation.

When Jesus called her name - "Mary" - everything changed in a single word. He did not first appear to the powerful or the learned, but to one who had known both brokenness and healing, whose love kept her faithful when logic said there was nothing left to hope for.

Pope Francis described St Mary Magdalene as the Apostola

Apostolorum, the Apostle to the Apostles. “Go and tell my brothers” (Jn 20:17). She, who came to embalm a corpse, was sent to proclaim a living Lord. This transformation is not accidental. It reflects the pattern of every genuine Easter faith — and it also shapes every priestly vocation. We, too, dear Fathers, are called to bring the joy of the Risen Christ to those who weep and to those who have not yet heard their name called by the Lord.

**From Fear to Mission**

On that first Easter Sunday, the disciples were behind locked doors “for fear of the Jews” (Jn 20:19). These were men who had walked with Jesus for three years, witnessed his miracles, and shared his table. Yet fear had paralysed them. The crucifixion had shattered their dream of a messianic kingdom. Peter had denied him, and most had fled.

Their locked doors are not merely physical. They are spiritual and psychological, symbolising the closing of hope and retreat into self-protection when life overwhelms. How often do we encounter such locked doors — not of wood and iron, but of the heart? Fear of failure, of change, of the future of our mission in the diverse and complex region of our Eparchy?

Into this locked room entered the Risen Christ. His first word was not a rebuke but a gift: “Peace be with you” (Jn 20:19). He showed them his hands and his side — not to prove a point but to reassure them that it was truly he, the One who had loved them to the end. “The disciples rejoiced when they saw the Lord” (Jn 20:20). It was not argument or evidence that changed them. It was his presence. This is why the Eucharist is not merely ritual but a genuine encounter. At every Mass, we receive the Risen Christ and are sent: “As the Father has sent me, so I send you” (Jn 20:21).

Jesus breathed on them: “Receive the Holy Spirit” (Jn 20:22). The imagery recalls the original breath of life in Genesis 2:7. Easter signifies a new creation. The community of frightened followers becomes the Church — missionary, Spirit-filled, forgiving, and witnessing.

Thomas, absent and doubtful for a week, was not disqualified. The Risen Lord returned specifically for him. Easter is patient. It seeks

out the doubter, the sceptic, the one who needs to touch the wounds. “My Lord and my God!” — Thomas’s confession ranks among the most profound in the entire Gospel. His Easter came a week late, but it arrived, and it was complete. As we revere him as the father of our Church, let us imitate him in his deep attachment and faith in the risen Christ!

At the Sea of Tiberias (Jn 21), the disciples had returned to their nets — to the familiar. Peter’s reinstatement is among the most moving passages in Scripture. Three times: “Do you love me?” — corresponding to the three denials. Each affirmation was met not with condemnation but with commission: “Feed my lambs… tend my sheep… feed my sheep.” For Peter, Easter meant rehabilitation, recommissioning, and a renewed mission. Easter does not demand perfection. It calls for openness. The Risen Christ comes to us in our locked rooms, in our moments of failure and doubt. He asks: “Do you love me?” Our answer, lived out daily in fidelity to our priestly vocation, is our Easter proclamation.

**From Compassion to Maternal Intercession**

The Scriptures do not mention a Resurrection appearance to Mary, the Mother of Jesus. However, the entire tradition of the Church maintains that the Risen Christ appeared first to his Mother. This belief is shared by saints such as Ignatius of Loyola and Alphonsus Liguori, and it aligns with the logic of love. Would the Son, who loved his own to the very end, have failed to visit the one who bore him, who remained faithfully by the foot of the cross?

If Good Friday was the sword that pierced her soul (Lk 2:35), then Easter was its reversal — the vindication of every act of faith Mary had ever made, from her Fiat to the silent vigil of Holy Saturday.

That Holy Saturday offers a profound theological insight: when the disciples had scattered, and all seemed lost, Mary alone maintained the faith of the entire Church. Her faith was not naive optimism but the result of a lifelong journey of contemplation, surrender, and trust. She did not know the how or when of the Resurrection, but she knew the Who — and that was sufficient.

Easter transformed Mary’s role. From Mother of the Lord, she became Mother of the Church (Jn 19:27), present at Pentecost

(Acts 1:14) and gathered with the disciples in prayer. Her maternal intercession continues. We, as priests of the Eparchy of Thuckalay, serve under her maternal care, and we draw from this Easter grace as we shepherd our people.

**Easter Joy Multiplied**

The joy of Easter is greatly enhanced in our Eparchy this season by the gift of three priestly ordinations. Our Lord, the Lord of the harvest, is kind to us. As you know, I will ordain our three deacons Bibin Vettakonam, Bibin K.J and Tony Kallamparmpil to the Sacred Priesthood on 7, 8, and 14 April 2026.

I warmly invite and urge all the priests of the Eparchy to make every effort to attend these ordinations. The ordination of a priest is not merely a personal celebration; it is a grace for the entire Eparchy. Your presence, dear Fathers, signifies our priestly fraternity and the communion that unites us as shepherds of one flock. The newly ordained will draw strength and encouragement from the witness of their brother priests.

**Vocation Month in Our Eparchy**

The month of April is observed in our Eparchy as Vocation Month, a time dedicated to prayer, awareness, and action to encourage priestly and religious vocations. This is not a minor issue but a matter of crucial importance for the future of our Church. The Eparchy of Thuckalay has been blessed with generous and dedicated priests and religious; however, the harvest is plentiful, and the workers must be increased. Every vocation that is nurtured and answered is a gift not only to the Church but also to the families and communities of our Eparchy.

We will organise a "come and see" Vocation Camp scheduled for 17 and 18 April 2026. This camp will gather young men who are discerning a call to priestly or religious life, providing them with a space for prayer, reflection, and encounter with the Lord. I ask each parish priest to identify promising, spiritually inclined young men in their parishes and personally invite them to participate in the Vocation Camp on 17 and 18 April 2026. Speak to their parents, encourage them from the pulpit, and — above all — pray with and for them. A word from a priest can make all the difference to a young heart that is wavering.

Let this Easter season, with its message of new life and fresh beginnings, be the moment when a future priest says his own Fiat to the Lord's call.

## Preparing Our Young in Faith

As the academic year approaches its end, our students across the Eparchy are writing their annual examinations. I recognise the significant pressure this period places on young people and their families, and I encourage you all to keep them in your prayers and offer any pastoral support you can during this challenging time.

Following the conclusion of examinations, we will organise the VPV (Visvasa Payirchi Vizha) across all parishes of the Eparchy. This is a valued and vital initiative that educates our young Catholics in the core aspects of their faith, liturgical life, Scripture, and the moral and sacramental life of the Church. It presents an irreplaceable opportunity to strengthen the faith of our youth during a formative stage of their lives.

I earnestly encourage each parish priest to begin preparing the students early, so that the VPV can start without delay once the examinations are finished. Preparation should involve, of course with the support of Catechetical department, identifying catechists and resource persons, organising the student groups by age and level, planning the programme schedule, and ensuring families are informed and supportive. The VPV is most effective when it is well-organised and when students arrive prepared and eager. Let us not treat it merely as a routine activity; instead, let it be a sincere encounter between our young people and the Church's living faith.

## A Renewed Pastoral Zeal

Dear Fathers, as we celebrate Easter, let us embrace the mystery of the Resurrection to be renewed from within. Mary Magdalene discovered the Risen Lord in a garden at dawn — in tears, in love, in fidelity. The disciples encountered him through locked doors, through wounds, in the breaking of bread, beside an ordinary lake. The Blessed Mother welcomed him in the silence of a faith that had never ceased believing. Each of these encounters reveals a different facet of Easter grace, and each one speaks to us as priests.

We, too, will discover the Risen Lord in our tears and loyalty, in

our fear and openness, in our pondering and trust. In the words of St Augustine: “We are Easter people, and Alleluia is our song!” Let that Alleluia resound in every parish and chapel, in every home we visit and every sacrament we administer, across all the cherished communities of our Eparchy.

**CONCLUSION**

On 12 April, the Second Sunday of Easter, we observe Divine Mercy Sunday, rooted in the mystical revelations of St Faustina Kowalska and enriched by special promises from Our Lord and indulgences granted by the Holy See. I invite each of you, dear Fathers, to make this a day of authentic encounter with the merciful heart of Christ for your communities — through the solemn recitation of the Divine Mercy Chaplet, the celebration of the Sacrament of Reconciliation, and other suitable devotional programmes in your parishes.

I also wish to encourage you to stay attentive to our ongoing missionary outreach in the extended territories of our Eparchy. As we rejoice in the Risen Lord who sends us as the Father sent him, let us renew our missionary zeal and invoke His blessing upon all our initiatives, so that the Gospel may reach every corner of the flock entrusted to our care.

I extend my prayerful wishes for a blessed and grace-filled Easter to each of you, to your parishioners, to your families, and to all those in your pastoral care. May the Risen Lord walk beside you and fill you with His peace!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

சீரோ மலபார் இளையோர் இயக்கம் **SMYM**

**Taize Prayer**

நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூடுகை 2026 பிப்ரவரி 22 -இல் நடைபெற்றது. கூட்டத்தில் எடுத்த முடிவின் படி மார்ச் 01, மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை சூசைபுரம் மறைவட்டத்திற்கு உட்பட்ட மாங்கரை ஆலயத்தில் வைத்து மறைவட்ட Taize Prayer நடைபெற்றது.



இந்த செபம் இளையோர் இயக்கத்தின் முன்னாள் தலைவர் மனோஜ் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. அன்றைய தினம் பிலாங்காலை மறைவட்ட ஆலயத்தில் வைத்து மாலை 2.00 மணி முதல் 4.00 மணி வரை மறைவட்ட இளையோருக்கான Taize Prayer நடைபெற்றது.

***சேனிகா***
***செயலர்***




சூசன்னா நாடகப் போட்டி

2026 மார்ச் 28 மாதர்ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக படந்தாலுமூடு மறைவட்டம் தெற்றியோடு ஆலய ஆசீர் வித்யாலயா ஆடிட்டோரியத்தில் வைத்து தாய்மார்களுக்கு சூசன்னா என்னும் தலைப்பில் நாடகப் போட்டி நடைபெற்றது. இதில் படந்தாலுமூடு மறைவட்டத்தை சேர்ந்த பங்குகளிலிருந்து சுமார் ஐந்து குழுக்களாக தாய்மார்கள் பங்கேற்றனர். போட்டியில் முதல் பரிசு அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்திற்கும், இரண்டாவது பரிசு படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்திற்கும், மூன்றாவது பரிசு தெற்றியோடு புனித பவுல் ஆலயத்திற்கும் கிடைத்தது. இப்போட்டியில் கலந்து கொண்ட தாய்மார்கள் தங்களுக்கு இது மறக்க முடியாத நிகழ்வு எனவும் தங்கள் திறமைகளை வெளிக்கொணர கிடைத்த வாய்ப்பாகவும் கருதியதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

**நற்கருணை ஆன்மீக தியானம்**

கிள்ளியூரில் உள்ள SABS கன்னியர் இல்லத்தில் 52 நாள் நற்கருணை தியானம் 2026 மார்ச் 27, பங்கு தந்தை ஜோஸ் புரையுடத்துக்குன்னேல் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கியது., தற்போது, 33 பேர் இந்த தியானத்தில் தங்களை அர்ப்பணித்துள்ளனர். முழு மறைமாவட்டமும் இணைந்து இந்த தியானத்தை பயனுள்ள வகையில் மாற்ற அழைக்கப்படுகிறார்கள்.




# வின்செென்ட்- தே-பவுல் சபை

## திட்டத்தொகை வழங்குதல்



கிள்ளியூர் பங்கில் செயல்படும் தேவமாதா கிளை சபை சார்பில் திட்டத்தொகை வழங்குதல் நிகழ்வு மார்ச் 01 ஆம் தேதி நடைபெற்றது. ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குன்னேல் வழிகாட்டுதலில் ஆறு நபர்களுக்கு ரூபாய் 5000 வீதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோ எட்வின்சன் சூசைபுரம் வட்டார சபை தலைவர் சகோ. ஜாண் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதற்கான ஏற்பாடுகளை கிளைச்சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## மறைக்கல்வி மாணவர்களுக்கு பிறரன்பு பணி பயிற்சி

பரைக்கோடு பங்கில் செயல்படும் கிளைச்சபையினர் இளம் வின்செந்தியர்களை உருவாக்கும் நோக்கில் 'வின்செந்தியம் அறிவோம்' என்னும் மைய சிந்தனையில் பயிற்சி ஒன்றை ஏற்பாடு செய்தனர். ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை செபி அவர்கள் வழி காட்டுதலில் வட்டார சபை தலைவர் அறிவுறுத்தலின் பேரில் பயிற்சி மார்ச் 22 ஆம் தேதி நடந்தது. மத்திய சபை திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் பயிற்சி அளித்தார். இதற்கான ஏற்பாடுகளை கிளைச்சபை உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மாணவர்களுக்கு இப்பயிற்சி

பயனுள்ளதாக அமைந்தது. சுமார் 50 மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர் இப்பயிற்சியில் பங்கேற்றனர். நிகழ்ச்சியை வட்டார சபை செயலர் சகோ மெரின் தேவிகா ஒருங்கிணைத்தார்.

## இளம் வின்செந்தியர் பயிற்சி



கிள்ளியூர் பங்கில் செயல்படும் மகளிர் கிளைச்சபையினர் இளம் வின்செந்தியர்களை உருவாக்கும் நோக்கில் 'வின்செந்தியம் அறிவோம்' என்னும் மைய சிந்தனையில் பயிற்சி ஒன்றை ஏற்பாடு செய்தனர். ஆன்மீக ஆலோசகர் தந்தை வழி காட்டுதலில் சூசைபுரம் வட்டார சபை தலைவர் சகோ. ஜான் தலைமையில் பயிற்சி மார்ச் 01 ஆம் தேதி நடந்தது. மத்திய சபை திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் பயிற்சி அளித்தார். இதற்கான ஏற்பாடுகளை கிளைச்சபை தலைவி மற்றும் உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மாணவர்களுக்கு இப்பயிற்சி பயனுள்ளதாக அமைந்தது. சுமார் 20 மாணவ மாணவியர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு

## ஆலோசனைக் கூட்டம்

2026 மார்ச் 15 ஆம் தேதி பொதுநிலையினர் பணி குழுவின் நான்கு மறைமாவட்டங்கள் இணைந்து தக்கலையில் வைத்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்திற்கு தக்கலை மறை மாவட்ட பொதுநிலையிர் பணிக்குழு சார்பாக தலைவர் Adv. தனசிங் அவர்களும் பொருளாளர் Adv. ராஜா எரிக் காட்வின் அவர்களும் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் மே தினத்தை சிறப்பிக்கும் விதமாக நான்கு மறைமாவட்டங்களும் இணைந்து மே தின விழாவை கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது. மே தின விழாவினை மே 17 ஆம் தேதி கொண்டாடலாம் எனவும் நிகழ்ச்சியை மே தின மாநாடு என கொண்டாட வேண்டும் எனவும் மதியம் 3 மணிக்கு படந்தாலுமூடு ஆலயத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு திருத்துவபுரம் ஆலய மண்டபத்திற்கு சென்று அங்கே பொதுக்கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. படந்தாலுமூடு ஆலயத்தில் துவங்கும் பேரணியை தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்கள் துவங்கி வைப்பார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

## நலவாரிய அட்டை

பொதுநிலையினர் பணிக்குழுவின் நலவாரிய அட்டை பற்றிய விளக்கக் கூட்டம் மாங்கரை ஆலயத்தில் மார்ச் 8 ஆம் தேதி காலை 9:30 மணிக்கு நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மறைமாவட்ட பொது நிலையினர் பணிக்குழு தலைவர் Adv.N.தனசிங் அவர்கள் பொதுநிலையினர் பணிக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் நலவாரிய அட்டையின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார்கள். மேலும் கூட்டத்தில் கலந்து கொண்ட மறைமாவட்ட பொது நிலையினர் பணிக்குழு அலுவலக பணியாளர்கள் அமலா டி ஜெயின் மற்றும் செல்வராணி



ஆகியோர் நலவாரிய அட்டை வாங்குவது எப்படி? புதுப்பிப்பது எப்படி? அதிலிருந்து வரக்கூடிய பயன்களை பெறுவது எப்படி என்ற மக்களின் சந்தேகங்களை தீர்த்து வைத்தார்கள். கூட்டம் 11 மணி அளவில் இனிது முடிவுற்றது.

## தொழிலாளர் நல வாரிய ஆலோசனைக் கூட்டம்

மார்ச் 27 மதியம் மூன்று மணிக்கு பொதுநிலையினர் பணிக்குழுவிற்கு உட்பட்ட தொழிலாளர் நல வாரிய ஆலோசனைக் கூட்டம் சுங்கான் கடை புனித சவேரியார் பொறியியல் கல்லூரியில் மார்த்தாண்டம் மறை மாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நான்கு மறை மாவட்டங்கள் இணைந்து தொழிலாளர் தினத்தை மாநாடாக கொண்டாட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஒவ்வொரு மறை மாவட்டங்களிலிருந்தும் தலா 200 பேர் வீதம் மொத்தம் 800 பேரை மாநாட்டில் கலந்து கொள்ள செய்து ஒரு வெற்றி மாநாடாக நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

**செயலர்,**

**ஜெயலால்**

# உறவிய மலர்

**தவக்கால சிறப்பு தியானம்**

மார்ச் 28, சனிக்கிழமை சீனாய் தியான இல்லத்தில் வைத்து உறவிய பொறுப்பாளர்களுக்கான தவக்கால சிறப்பு தியானம் நடைபெற்றது. காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை நடைபெற்ற இத்தியானத்தை சீனாய் தியானக் குழுவினர் வழிநடத்தினார்கள். சிறப்பு நிகழ்வாக துவக்கத்தில் சிலுவைப் பாதை தொடர்ந்து இறைப் புகழ்ச்சி, தியான உரை, நற்கருணை ஆராதனை, பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையும் ஆற்றினார். உறவிய ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் என்று 260 -க்கு மேல் உறுப்பினர்கள் இத்தியானத்தில் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

**திருச்சிலுவை தேவாலயம் மாலைக்கோடு**

நோன்பு கால சிலுவைப்பாதை அனைத்து வீடுகளிலும் நடத்தப்பட்டு அனைத்து வீடுகளும் மந்திரிக்கப்பட்டது. மொத்தம் உள்ள 8 உறவியங்களில் 4 உறவியங்கள் சேர்ந்து இரண்டு இடங்களில் உறவிய வார்டு கன்வென்ஷன் மார்ச் 1 மற்றும் 23 ஆகிய நாட்களில் நடைபெற்றது. திருச்சிலுவையின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் கன்வென்ஷனை பங்குத்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்கள் வழிநடத்தினார்கள்.

**களியல் மறைவட்டம்**

**புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி**

தவக்கால சிறப்பு நிகழ்வாக நம் ஆண்டவரின் பாடுபட்ட திருசொரூபம், மரியாயின் சேனை வெள்ளி விழா நினைவாக வழங்கப்பட்டிருக்கும் மரியன்னையின் திருசொரூபம், மற்றும் பங்கின் பாதுகாவலர் புனித தோமையாரின் திருசொரூபம் எடுத்து வீடு மந்திரிப்புடன் எரிக்கோ திருப்பயணம் என்கிற பெயரில் சிலுவைப் பாதைப் பயணம் பங்கிலுள்ள

ஐந்து உறவியங்களில் ஐந்து வாரங்களாக நடைபெற்றது. எரிகோ திருப்பயணத்தின் இறுதியில் ஒவ்வொரு உறவியங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. உறவிய இறை மக்கள் அனைவரும் வெளிமக்களும் இத்தியானத்தில் கலந்து கொண்டார்கள். பங்குத்தந்தை அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தியானத்தை வழிநடத்தினார். எரிக்கோப் பயணத்தின் இறுதியிலும் உறவிய தியானத்தின் இறுதியிலும் உறவிய இறைமக்களால் அன்பின் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

**அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்**
**இயக்குனர்**

| BIRTHDAY OF REV. FATHERS - APRIL - 2026 | |
|---|---|
| FR. ANTONY MADAPURACKAL | 01 |
| FR. ABY POOVATHUMMOOTTIL | 01 |
| FR. VINU D JOSEPH | 02 |
| FR. JIMMY THEKKEKADUMATHIL | 04 |
| FR. AJEESH ATTIYIL | 08 |
| FR. JOSY PUTHEPURACKAL | 10 |
| FR. JUSTIN SUTHEESH | 11 |
| MAR GEORGE RAJENDRAN SDB | 14 |
| FR. DOMINIC MUNDATT MCBS | 14 |
| FR. DENCY MUNDUNADACKAL | 14 |
| FR. SEBASTIAN POTHENPARAMPIL MST | 19 |
| FR. CHARLES MUNDAKATHIL CMI | 20 |
| FR. RELIN JOSEPH PADINJAREVEETTIL | 20 |
| FR. GEO (JOHN) OOROTH | 21 |
| FR. JACOB AYAMMATHRA | 22 |

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

### சுயஉதவி குழு ஆண்டுவிழா மற்றும் மகளிர் தின விழா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் சுயஉதவி குழு (SHG) ஆண்டுவிழா மற்றும் மகளிர் தின விழா 2026 பிப்ரவரி 22 முதல் மார்ச் 30 வரை 32 மையங்களில் சிறப்பாக நடைபெற்றது. "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உரிமைகள், நீதி, செயல்பாடு" என்ற கருப்பொருளில் விழாக்கள் கொண்டாடப்பட்டது. தக்கலை மற்றும் பிலாங்கரை மையங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் KKSSS தலைவருமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமை தாங்கினார். பிற மையங்களில் இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் ஆய்வாளர், உள்ளூர் பங்குத்தந்தைகள்,



ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் வங்கி மேலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். பெண்கள் கலாச்சார நிகழ்ச்சிகள், நாட்டுப்புற நடனங்கள், பாடல்கள் மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் மூலம் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். சில மையங்களில் ஏழை SHG பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் ஊக்குவிப்பாளர்களின் சிறந்த ஒருங்கிணைப்பால் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழா பெண்களின் உரிமை, சமத்துவம் மற்றும்

முன்னேற்றத்தை வலியுறுத்தும் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்தது.

**மருத்துவ முகாம்**



கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) மற்றும் புனித சவேரியார் பல்நோக்கு மருத்துவமனை, சுங்கான்கடை இணைந்து 2026 மார்ச் 08, வயலின்கரை புனித அன்னை தெரசா படுக்கை நோயாளிகள் மையத்தில் வைத்து மருத்துவ முகாம் நடைபெற்றது. KKSSS இயக்குநர் அருட்தந்தை தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் மருத்துவர்கள் மற்றும் 16 மருத்துவ பணியாளர்கள் சேவையாற்றினர். பொதுவான உடல்நலம் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 80 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டதுடன், சிகிச்சைக்கு வழிகாட்டுதலும் அளிக்கப்பட்டது. இம்முகாம் கிராமப்புற மக்களிடம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி, தன்னார்வ அமைப்புகளின் சேவை மனப்பான்மையை வெளிப்படுத்தும் சிறப்பான முயற்சியாக அமைந்தது.

***செயலர்***

***அருட்தந்தை மகேஷ்,***

# நலவாழ்வுப் பணிக்குழு

**நோயாளிகள் தினம் மற்றும் மருத்துவ முகாம்**

நலவாழ்வு பணிக்குழு தக்கலை மறைமாவட்டம் மற்றும் மாலைக்கோடு, திருச்சிலுவை ஆலயம் இணைந்து 2026 மார்ச் 15, நோயாளிகள் தினம் மற்றும் மருத்துவ முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி மலைக்கோடு ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ரோபின்ஸ் அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். நிகழ்ச்சி திருப்பலியுடன் தொடங்கியது. அதன் பின் நோயாளிகளுக்கான சிறப்பு ஜெபமும் நடைபெற்றது. முதியோர் மற்றும் உடல்நல குறைபாடுகள் உள்ளோர் அதிக அளவில் பங்கேற்று ஆன்மீக ஆறுதலையும் பெற்றனர். தொடர்ந்து மருத்துவ குழுவினரால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் பொதுமருத்துவ பரிசோதனை, இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை பரிசோதனை போன்ற சேவைகள் வழங்கப்பட்டன. மொத்தம் 50 பேர் இதில் பங்கேற்று பயன்பெற்றனர். தேவையானவர்களுக்கு மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த முகாம் சமூகத்தில் உடல்நல விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், முதியோரின் ஆரோக்கியத்திற்கும் முக்கியத்துவம் அளித்தது. நலவாழ்வு பணிக்குழு மற்றும் பங்கு மக்கள் இணைந்து இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தது. இந்த நிகழ்ச்சி ஆன்மீகமும் உடல்நலமும் இணைந்த அர்த்தமுள்ள முயற்சியாக அமைந்தது.

*செயலர்*
*அருட்தந்தை மகேஷ்,*

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"தாயின் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்கும் முன்பே உன்னைத் அர்ப்பணித்தேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்"**

**(எரேமியா 1:5 )**

பல்வேறு உயர்குரு மடங்களில் பயிலும் மாணவர்கள், தங்கள் விடுமுறைக்காக மார்ச் மாத இறுதியில் மறைமாவட்டத்தை வந்தடைந்தனர். 2026 மார்ச் 22 முதல் 28 வரையிலான நாட்களில், முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வருடாந்திர தியானம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, மார்ச் 29 முதல் அனைத்து குருமாணவர்களும் பல்வேறு பங்குகளில் திருத்தொண்டு பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து 30 ஆம் தேதி இறையியல் பயிலும் குருமாணவர்களுக்கு சிறு பட்டங்களும் 31 இல் அருட்சகோதரர் டிவின் ராஜ் அவர்களுக்கு திருத்தொண்டர் பட்டமும் வழங்கப்பட்டது.

**இவண்**

**அருட்சகோ காட்வின் மற்றும் ஸ்ரீஜித்**

**மேற்கு ஆசியாவுக்கான ஜெப நாள்**

மத்திய கிழக்கு நாடுகளில் நடந்து வரும் மோதல்கள் மற்றும் அதிகரித்து வரும் வன்முறைகள்; நம் அனைவருக்கும் ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் அளித்துள்ளன. 2026 மார்ச் 06 சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மற்றும் தமிழ்நாடு ஆயர் பேரவை தலைவரும் இணைந்து, ஒரு சிறப்பு வேண்டுதல் நாளுக்கு அழைப்பு விடுத்தனர். இந்த வழிகாட்டுதலைத் தொடர்ந்து, நமது மறைமாவட்டம் கடந்த மார்ச் 6, 2026 வெள்ளிக்கிழமை, போரையும் உடனடி சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கான சிறப்பு ஜெப நாளைக் கடைப்பிடித்தது.

# மறைமாவட்டச் செய்திகள்

## மறைமாவட்ட அருட்தந்தையர் கூடுகை

அருட்தந்தையர் கூடுகை முழுவதும் 2026 மார்ச் 9 முதல் மார்ச் 11 வரை மறைவட்டம் சார்பில் நடைபெற்றது. மார்ச் 9 அன்னிக்கரை புனித மத்தேயு ஆலயத்தில் படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்ட பங்குகளுக்கான கூடுகை நடந்தது. இதைத் தொடர்ந்து, மார்ச் 10-ஆம் தேதி மாறப்பாடி புனித தோமையார் ஆலயத்தில் ஆறுகாணி, களியல் மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்ட பங்குகளுக்கான கூடுகையும், மார்ச் 11-ஆம் தேதி சூசைபுரம், தக்கலை பிலாங்காலை மறைவட்ட பங்குகளுக்கான கூடுகை சூசைபுரம் புனித ஜோசப் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் மற்றும் மறைவட்ட கியூரியா உறுப்பினர்கள் அனைத்து அமர்வுகளிலும் கலந்து கொண்டனர். கூட்டங்கள் காலை 10:00 மணிக்கு ஜெபம் மற்றும் ஆராதனையுடன் தொடங்கி, அன்பின் விருந்துடன் முடிவடைந்தது. எனினும், அருகாணி–மஞ்சலுமூடு–களியல் கூடுகை மாலை 6:00 மணிக்கு ஆராதனையுடன் தொடங்கியது. ஆயர் ஒருங்கிணைப்பு மற்றும் துறைசார் செயல்பாடுகளை மையமாகக் கொண்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

## பேராலயம் கட்டுமானப் பணிகள் தொடக்கம்

2026 மார்ச் 19, புனித ஜோசப் பெருவிழாவையொட்டி, பேராலயம் கட்டுமானத்தின் அதிகாரப்பூர்வ தொடக்க விழா சூசைபுரத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கியது, இறுதியில் ஆயர் அவர்கள் கட்டுமானப் பணியை அதிகாரப்பூர்வமாக துவக்கி வைத்து, தளம் மற்றும் தொழிலாளர்களை ஆசீர்வதித்தார். 2026 ஆம் ஆண்டு விருந்தின் சிறப்பம்சமாக, சூசைபுரத்தில் ஒரு புதிய பாரம்பரியம் அறிமுகப்படுத்தப்பட்டது. வீட்டுநேர்ச்சை: அங்குள்ள அனைவருக்கும் "நேர்ச்சா" (மதிய உணவை வழங்கும் நடைமுறை) அறிமுகப்படுத்தப்பட்டது.

## ஆயர் ஜெரோம் தாஸ் வறுவேல் எஸ்.டி.பி அவர்களுக்கு இறுதி மரியாதை

2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஜூன் 6 வரை குழித்துறை மறைவட்டத்தின் முதல் ஆயராக பணியாற்றி, மக்கள் மனதில் நம்பிக்கையின் மேய்ப்பராகவும், முன்னோடியாகவும் இருந்த குழித்துறை மறைமாவட்ட மேனாள் ஆயர் ஜெரோம் தாஸ் வறுவேல் எஸ்.டி.பி (74) அவர்கள் 2026 மார்ச் 24 உடல்நலக்குறைவு காரணமாக காலமானார்.

இறுதி சடங்குகள் மார்ச் 25 புதன்கிழமை பிற்பகல் 3:00 மணியளவில் திரித்துவபுரம் மூவொரு இறைவன் பேராலயத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் குழித்துறை ஆயர் இல்லத்தில் ஆயரின் ஆன்மா சாந்தியடையவும், குழித்துறை மறைமாவட்ட ஆயர், அருட்தந்தையர்கள், பொது மக்களுக்கும் இரங்கல் தெரிவிப்பதற்காகவும் தக்கலை மறைமாவட்ட ஆயர் தலைமையில் அருட்தந்தையர்கள் கூடினர். பின் இறந்தவர்களுக்கான ஒப்பீசு ஜெப வழிபாடு நடைபெற்றது. கருணையுள்ள இறைவன் அவருக்கு நித்திய பேரின்பத்தை வழங்க வேண்டும் என்று அனைவரும் செபித்தனர்.

## பாத்திமாபுரத்தில் குருத்தோலை ஞாயிறு கொண்டாட்டங்கள்

குருத்தோலை ஞாயிறு எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான நுழைவை நினைவுபடுத்துகிறது, அங்கு அவரை மக்கள் பனை கிளைகளை அசைத்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். கிறிஸ்துவுக்கு நம் இதயங்களைத் திறக்கவும், அவருடைய போதனைகளை உண்மையுடன் பின்பற்றவும் இது ஒரு ஆழமான நினைவூட்டலாக செயல்படுகிறது. இந்த ஆண்டு, 29 மார்ச் 2026 அன்று, பாத்திமாபுரம் (குடுக்கச்சிவிளை) பாத்திமா மாதா ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு வழிபாட்டு விழாக்களுக்கு ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். காலை 10:00 மணிக்கு குருத்தோலை மந்திரித்து குருத்தோலை கைகளில் ஏந்தி பவனியாக சென்றார்கள்.

## புலம் பெயர்ந்தோர் பணி குழு

2026 மார்ச் 22, இரவு 8 மணிக்கு புலம்பெயர்ந்தோர் பணி குழுவின் சார்பில் இணையம் வழி சிலுவை பாதை நடைபெற்றது. தொடக்க நிகழ்வு மற்றும் வரவேற்புரை இயக்குனர் அருள்தந்தை சுமேஷ் வள்ளியான்தடத்தில் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து 14 நிலைகளையும் துபாய், புதுச்சேரி, சென்னை, பெங்களூரு, கோயம்புத்தூர், லண்டன் மற்றும் ஆந்திரா பகுதிகளில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்காக புலம் பெயர்ந்து வசிக்கும் மறைமாவட்ட மக்களால் சொல்லி ஜெபிக்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். நிறைவு ஜெபத்தினை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருள்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் வழி நடத்தினார். ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்களும் இணைந்து ஜெபித்தனர்.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

ஏப்ரல் 07 - குருத்துவ அருட்பொழிவு - திருத்தொண்டர் பிபின் வேட்டகோணம்

ஏப்ரல் 08 - குருத்துவ அருட்பொழிவு - திருத்தொண்டர் பிபின் கோயிக்காக்குடியில்

ஏப்ரல் 14 - குருத்துவ அருட்பொழிவு - திருத்தொண்டர் டோனி கல்லம்பரம்பில்

ஏப்ரல் 21-22 - அருட்தந்தையர்களின் வருடாந்தர சுற்றுலா

ஏப்ரல் 18-24 - அருட்சகோதரர்களின் பணிப் பயிற்சி

ஏப்ரல் 26 - வருடாந்தர விசுவாசப் பயிற்சி விழாத் தொடக்கம்

ஏப்ரல் 28 – அருட்தந்தையர்கள் கூடுகை

# சீனாய் இறையியல் கல்லூரி

## தவக்காலத் திருப்பயணம்



2026 மார்ச் 22 இயக்குநர் தந்தை ஷிஜோ அவர்கள் தலைமையில் அருட்சகோதரி அர்ச்சனா மற்றும் 15 இறையியல் மாணவர்கள் தென்காசி, வாஞ்சிநகர் பங்கிற்கு திருப்பயணம் சென்றனர். பங்குதந்தை அருட்தந்தை சுமேஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பின் 9 மணிக்கு அருட்தந்தை ஷிஜோ அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து இறையியல் மாணவர்களின் கருத்தரங்கும் மறைகல்வியின் முக்கியத்துவம் என்பது பற்றியும், இறைஅனுபவத்தை நாடகம் வழியாகவும் நடனம் வழியாகவும் எடுத்து கூறினார்கள். கேள்விகள் கேட்டு இறைமக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பின் பங்கு மக்களோடு சேர்ந்து உணவு உண்டு மகிழ்ந்தனர். பின்னர், புளியரை பங்கையும் பார்வையிட்டனர். அருட்தந்தை டென்சி அவர்கள் பங்கை பற்றியும் பங்கு மக்களின் விசுவாசத்தை பற்றியும் எடுத்துக் கூறினார். அங்கிருந்து 4 மணி அளவில் புறப்பட்டு குற்றாலம் நீர்வீழ்ச்சி கண்டு திரும்பினர். இது இறையியல் மாணவர்களின் முதல் அனுபவமாக இருந்தது.

**அருட்தந்தை ஷிஜோ**

**இயக்குனர்**

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### புனித பெனடிக் ஆலயம் பென்கிரி



மார்ச் 22, பங்கு தந்தை தலைமையில் 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் சென்று செபித்தனர்.

### திருக்குடும்ப தேவாலயம் முக்கூட்டுக்கல்

மார்ச் மாதம் தவக்காலத்தை முன்னிட்டு இளைஞர் இயக்கம் சார்பாக பங்கு மக்களின் வீடுகளில் தயார் செய்த 127 உணவு பொட்டலங்கள் பங்கு தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் தலைமையில் களியக்காவிளை, வெட்டுமணி, மார்த்தாண்டம், மார்த்தாண்டம் ரெயில் நிலையம் போன்ற இடங்களில் உள்ள சாலையோர ஏழைகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. உறவியங்களில் உறவிய பொறுப்பாளர்கள் தலைமையில் சிலுவை பாதை 14 வீடுகள் 14 தலங்களாகக் கொண்டு பங்கின் 9 உறவியங்களிலும் உள்ள அனைத்து வீடுகளிலும் சிறப்பாக பங்கு தந்தை தலைமையில் சொல்லப்பட்டது. 21 ஆம் தேதி சனிக்கிழமை இறை இயேசுவின் பாடு மரணத்தை தியானித்து சிலுவை பாதை சொல்லும் நிகழ்வு நடைபெற்றது.

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

மார்ச் 08, மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. 15 ஆம் தேதி திருத்தொண்டு



பணிக்குழு சார்பாக வெள்ளாம்பி என்ற இடத்தில் உள்ள திருத்தொண்டு நிலையத்திற்கு செல்லப்பட்டது. தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வீடுகள் தோறும் சிலுவைப் பாதை சொல்லப்பட்டது. தவக்கால திருப்பயணமாக 14 ஆலயங்களில் சென்றார்கள். மிஷன்லீக் மாணவ மாணவிகள் சார்பாக சீனாய் தியான இல்லத்தில் உள்ள குருசு மலையில் சிலுவை பாதை சொல்லப்பட்டது.

### புனித சாவறா ஆலயம் குட்டைக்கோடு



மாதர் ஜோதீஸ் இயக்கம் பங்கு தந்தை ஜோகேஷ், அருட்சகோதரி ஜெயின் மரியா மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் தலைமையில் துவங்கப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளை

மாதர் ஜோதீஸ் இயக்கம் பங்கு தந்தை ஜோகேஷ் மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் தலைமையில் துவங்கப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 20 ஆம் தேதி வின்செட் தே பவுல் சபை சார்பாக



பங்கு தந்தை தலைமையில் கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையில் வட்டார தலைவர்கள் வருகை தந்தார்கள்.

### திருச்சிலுவை தேவாலயம் மாலைக்கோடு

நோன்பு கால சிலுவைப்பாதை அனைத்து வீடுகளுக்கும் பவனியாக சென்று வீடுகள் மந்திரிக்கப்பட்டது. மொத்தம் உள்ள 8 உறவியங்களில் 4 உறவியங்கள் சேர்ந்து இரண்டு இடங்களில் உறவிய வார்டு கன்வென்ஷன் மார்ச் 1 மற்றும் 23 ஆகிய நாட்களில் நடைபெற்றது. நமது பங்கில் சுமார் 4 மாதங்கள் பயிற்சி தந்தையாக செயல்பட்ட திருதொண்டர் பிபின் அவர்களுக்கு



பங்கு மக்கள் மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் சார்பாக பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது. புனித சூசைப்பர் தினத்தை முன்னிட்டு மார்ச் 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நோயாளிகள் தினம் அனுசரிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக ஆலயத்திற்கு வர முடியாமல் நோயாளிகளாக இருந்த மக்களை பங்குத்தந்தை மற்றும் பங்கு பேரவை உறுப்பினர்கள் உதவியுடன் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டு ஒப்புரவு மற்றும் நற்கருணை கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் 25 நோயாளிகள் கலந்து கொண்டனர். நோயாளிகளை ஆலயத்திற்கு கொண்டுவர KKSSS அமைப்பினர் அவசர ஊர்தி அளித்து இலவச மருத்துவ முகாமும் நடத்தினர். அன்றைய தினம் தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தின் சார்பாக அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. 22 ஆம் தேதி தந்தையர் நல்வாழ்வு இயக்கம் சார்பில் பங்குத்தந்தை தலைமையில் விருதுநகர் மிஷன் ஆலய மக்களை சந்தித்து திருப்பலி நிறைவேற்றி தியானம் நடத்தப்பட்டது. பழைய பொருட்கள் விற்று ஏற்கனவே சேகரித்து வைத்த ரூபாய் 25,000 அவ் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது. ஓசன்னா ஞாயிறு திருச்சடங்குகள் மாலைக்கோடு குருசடி கல்தளத்தில் இருந்து தொடங்கப்பட்டது. சிறக்கரை CSI சேகர சபை தலைமை போதகர் மற்றும் ஆலய மக்கள் நமது குருசடி கல்தளத்திற்கு வருகை தந்து திருச்சடங்குகளை சிறப்பித்தனர்.

### ▶ புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூடு

ஆலய கோபுரத்தின் மேல் இருக்கும் சொரூபம் மாற்றி புதிய சொரூபம் வைக்க தீர்மானிக்கப்பட்டது. அடுத்த மாதம் குருப்பட்டம் பெற உள்ள திருத்தொண்டர் பிபினுக்கு பிரிவு உபசார விழா நடத்தப்பட்டு பரிசும் வழங்கப்பட்டது. தவக்கால நிகழ்வாக இளைஞர்கள் ஆலயத்தை சுத்தம்

செய்தனர். மேலும் தோலடியில் இருக்கும் காருண்ணியா மனநலம் குன்றியோர் இல்லத்திற்கு பங்கு தந்தையின் தலைமையில் சென்று மதிய உணவு வழங்கப்பட்டது. வின்செந்தியர் சார்பாக ஆலயத்தின் மேற்கூரை சுத்தம் செய்தனர். 19 ஆம் தேதி புனித சூசையப்பர் திருவிழாவை முன்னிட்டு சிறப்பு திருப்பலி நற்கருணை ஆராதனை முடிவில் புனித சூசையப்பர் உறவிய மக்களால் இனிப்பு வழங்கப்பட்டது. 21 ஆம் தேதி தவக்கால சிலுவைப்



பாதை திருப்பயணம் தூத்தூர் தொடங்கி முட்டம் வரை 14 ஆலயங்களில் பங்கு தந்தை தலைமையில் 89 பங்கு மக்களும் சென்று செபிக்கப்பட்டது. 22 ஆம் தேதி மரியாவின் சேனை மஞ்சாலுமூடு கூரியாவின் தவக்கால தியானத்தை பேருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் அடிகளார் வழிநடத்தினார். நமது ஆலயத்தின் வருடாந்திர மற்றும் தவக்கால தியானம் 25,26,27, தேதிகளில் சகோதரர் டேவிட் டோமினிக் -சென்னை அவர்களால் வழிநடத்தப்பட்டு அனைத்து மக்களும் பாவ சங்கீர்த்தனம் செய்து பயனடைந்தனர். 29 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு சிறப்பாக கொண்டாடப்பட்டது. வின்செந்தியர் இயக்கம் சார்பாக தோலடி காருண்யா மன நல காப்பகத்தில் உணவு வழங்கப்பட்டது. 31 ஆம் தேதி வாறுதட்டு பங்கை சார்ந்த குருமாணவர் டிவைன் ராஜ் அவர்களுக்கு டீக்கன் பட்டம் ஆயர் தலைமையில் நமது ஆலயத்தில் நடைபெற்றது. இறுதியில் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## தக்கலை – பிலாங்காலை

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

தவக்காலத்தை முன்னிட்டு பாவசங்கீர்த்தனம் செய்ய ஆயத்தமாக ஒரு வகுப்பு நடத்தப்பட்டது. முதல் வெள்ளி ஆராதனை நடத்தப்பட்டது.



குருத்தோலை ஞாயிறு சிறப்பிக்கப்பட்டது. நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. வீடு சந்திப்பு நடைபெற்றது. எல்லா ௌ்ளிக்கிழமைகளிலும் சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது. புனித சூசையப்பர் திருவிழா அன்று திருப்பலி மற்றும் நவநாள் நடைபெற்றது.

- **புனித மிக்கேல் ஆலயம் வெள்ளாம்பி**

தவக்காலத்தை முன்னிட்டு பாவசங்கீர்த்தனம் செய்ய ஆயத்தமாக ஒரு வகுப்பு நடத்தப்பட்டது. குருத்தோலை ஞாயிறு சிறப்பிக்கப்பட்டது. நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. வீடு சந்திப்பு நடைபெற்றது. எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது.

- **புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை**

மார்ச் 9 ஆம் தேதி ஆலயத்தில் இருந்து தொடங்கி 10 ம் தேதி பரணங்கானம் முதல் எடத்துவா வரை 14 ஆலயங்களில் சிலுவைப்பாதை பங்குதந்தை தலைமையில் ஜெபிக்கப்பட்டது. 11 ஆம் தேதி மரியாயின் சேனை வெள்ளிவிழா மாதா சொரூபம் ஆலயத்தில் கொண்டுவரப்பட்டு பவனியாக திரு ஜெபமணி அவரது இல்லத்தில் எடுத்து செல்லப்பட்டது.



22 ம் தேதி மரியாயின் சேனை ஆச்சேஸ் விழா பிலாங்காலை கியூரியா சார்பாக நடைபெற்றது. புதிதாக மரியாயின் சேனை இயக்கம் தொடங்கப்பட்டது. 29 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு திருப்பலி ஆலயக்கல்லறை தோட்ட குருசடியில் தொடங்கி பவனியாக ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாத்துறை

மிஷன் லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கங்கள் சார்பாக தடிக்காரங்கோணம் அருளாளர் இராணி மரியா காப்பகத்தை சந்தித்து அவர்களுக்கு சிறிய உதவித் தொகை வழங்கப்பட்டது.

### புனித அன்னை தெரேசா ஆலயம் கல்லுவிளை



உலக மகளிர் தினத்தை மகளிர் ஒன்றிணைந்து கேக் வெட்டி பங்குத்தந்தை அருட்பணி மகேஷ் அவர்கள் தலைமையில் விழாவை சிறப்பித்தார்கள். தவக்காலத்தை முன்னிட்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் காவல்கிணறு சின்ன வேளாங்கண்ணி ஆலயம் முதல் தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் கடலின் நடுவில் அமைந்திருக்கும் புனித தோமையார் ஆலயம் வரை 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

2026 மார்ச் 4 ஆம் தேதி குழந்தை இயேசு இயக்கம் சார்பில் பங்குதந்தை தலைமையில் ஆரல்வாய்மொழி சென்று சிலுவைப்பாதை ஜெபிக்கப்பட்டது. 14 ஆம் தேதி நோயாளிகளுக்கான திருப்பலி ஆராதனை மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. அன்றைய தினம் இளைஞர்கள் சார்பில் பங்குதந்தை தலைமையில் கன்னியாகுமரியில் உள்ள 14 ஆலயங்களில் சிலுவைப்பாதை ஜெபிக்கப்பட்டது. 8 ஆம் தேதி பங்குதந்தைக்கு உதவியாக வந்த அருட்தந்தை சாக்கோ அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 12,10 ஆம் வகுப்பில்




படிக்கும் மாணவர்களுக்கு பொதுத் தேர்விற்காக ஜெபிக்கப்பட்டது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சிறப்பு ஜெபம் மற்றும் ஆசிர் அளிக்கப்பட்டது. 15 ஆம் தேதி அனைத்து உறவியங்கள் சார்பில் உணவுத் திருவிழா நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்களின் இரண்டாம் பருவத்தேர்வு நடைபெற்றது. 20 ஆம் தேதி பங்குதந்தை தலைமையில் ஆலயத்தில் இருந்து திரும்பி 21 ஆம் தேதி செத்திப்புழா சென்று காலையில் திருப்பலி நிறைவேற்றி கேரளாவில் உள்ள 14 ஆலயங்களில் சிலுவைப்பாதை ஜெபிக்கப்பட்டது. 21 ஆம் தேதி அனைத்து உறவியங்கள் சார்பில் வீடுகளில் சிலுவைப்பாதை ஜெபிக்கப்பட்டது. 28 ஆம் தேதி கல்லுவிளையில் வைத்து நடைபெற்ற உறவிய பொறுப்பாளர்களுக்கு நடைபெற்ற தியானத்தில் எம் பங்கில் இருந்தும் கலந்து கொண்டனர். 29 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு அருட்சகோதரிகள் இல்லத்தில் இருந்து தொடங்கி பவனியாக வந்து ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவடைந்தது. 31 ஆம் தேதி பங்கு தந்தை தலைமையில் புனித அன்னை மரியாள் உறவியம் சார்பில் தடிக்காரன்கோணம் மன நோயாளிகள் காப்பகம் சந்திக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது.

## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

2026 மார்ச் 1 ஆம் தேதி பொது தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்காக சிறப்பு திருப்பலி மற்றும் சிறப்பு வேண்டுதல் நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வீடுகளுக்கும் உறவியங்கள் சார்பில் சிலுவை

பாதை நடைபெற்றது. 6 ஆம் தேதி உலக அமைதிக்காகவும் தற்பொழுது நடைபெறும் போர் நிறுத்தம் வேண்டியும் சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. 19 ஆம் தேதி வழுக்கன்பாறை சகாயமாதா ஆலயம் தொடங்கி தூத்துக்குடி பனிமய மாதா ஆலயம் வரை 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் நடைபெற்றது. சுமார் 95 பேர் இதில் பங்கேற்றனர். 26 ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து, ஒப்புரவு வழங்குதலும் நடைபெற்றது. 27 ஆம் தேதி முழு இரவு விழிப்பு ஜெபம் நடைபெற்றது. அருள்தந்தை பிலிப்பு விழிப்பு ஜெபத்தை தலைமையேற்று வழி நடத்தினார். 29 ஆம் தேதி அருள் தந்தை தாமஸ் வீட்டு வேலிக்குந்நேல் வளாகத்திலிருந்து ஓசன்னா ஞாயிறு வழிபாடு தொடங்கியது. தொடர்ந்து சுமார் ஏழு மணி முதல் ஆனக்குழி சந்திப்பில் நடைபெற்ற ஐக்கிய ஓசன்னா ஞாயிறு விழாவில் நமது ஆலய மக்களும் இணைந்து பங்கேற்றனர். பங்குத்தந்தை அருள் தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் சிறந்ததொரு மறையுரை நிகழ்த்தினார். ஆலய சமூக நலக்கூட விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது.



### புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம், சூசைபுரம்

மார்ச் 01, மாலை 5.30 மணிக்கு பங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது. 08 ஆம் தேதி காலை திருப்பலி முடிந்தவுடன் பொது மன்றம் நடைபெற்றது. 10 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் ஏற்பாடு செய்த சிலுவைப் பாதை திருப்பயணம் காலை 6.15 மணிக்கு நடைபெற்ற திருப்பலியுடன் துவங்கப்பட்டு பங்குத்தந்தையின் தலைமையில் 14 ஆலயங்களுக்கு சென்று ஜெபிக்கப்பட்டது. 11 ஆம் தேதி புனித சூசையப்பர் திருநாளுக்கு ஆயத்தமாக

நவநாள் தொடங்கப்பட்டது. பேராலய வேலை பொருட்களை பாதுகாப்பாக வைக்கும் இடம் செய்யப்பட்டது. 15 ஆம் தேதி 1/2 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இரண்டாம் பருவ மறைக்கல்வி தேர்வுகள் நடைபெற்றன. வீடுகள் தோறும் ஜெபமாலை செய்வதற்காக மரியாயின் சேனை கொமிசியத்தாரால் இங்கு கொண்டுவரப்பட்ட அமலோற்பவ அன்னை சுரூபத்தை மரியாயின் சேனையினர் மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தனர். 18 ஆம் தேதி புனித சூசையப்பர் திருவிழாவிற்கான நேர்ச்சை உணவு தயாரிப்பதற்காகவும் ஆலய அலங்காரம் செய்வதற்காகவும் பங்கு மக்கள் ஆலயத்தில் ஒன்று கூடினர். இரவு 7 மணிக்கு அடுப்பு மந்திரித்தல் நிகழ்வு நடைபெற்றது. அதன் பின் நேர்ச்சை உணவு தயாரிக்கும் பணி துவங்கியது. 19 ஆம் தேதி பங்கின் பாதுகாவலர் புனித சூசையப்பர் திருவிழா காலை 10.30 மணிக்கு பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நவநாள் நடைபெற்றது. 10.30 மணிக்கு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. திருப்பலி முடிந்தவுடன் தங்களது பெயர் கொண்ட திருவிழாவினை கொண்டாடிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை டோஜி அருட்தந்தை ஜோஸ்மோன் ஆகியோருக்கு பெயர் கொண்ட திருநாள் வாழ்த்துக்கள் கூறி நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. கிறிஸ்து யூபிலி விவிலிய வாசிப்பு ஆண்டினை முன்னிட்டு நடைபெற்ற விவிலிய வினாடி வினா போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற குழுவினருக்கு ஆயர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள். பின்னர் புனித சூசையப்பர் மறைவட்ட மக்களுக்காக நடத்தப்படவிருக்கும் பேரருட்தந்தை பிலிப் கொடியந்தர நினைவு விவிலிய வினாடி வினாப் போட்டி ஆயர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. அதனை மாங்கரை பங்கு தந்தை டோஜி அவர்களும் கிள்ளியூர் பங்கு தந்தை ஜோஸ்மோன் அவர்களும் பெற்றுக் கொண்டனர். அடுத்ததாக பேராலய நிதிக்காக போர்வை விற்பனையை குறித்து ஆயர் அவர்கள் விளக்கி பேசி அதனை துவங்கி வைத்தார்கள். முதல் போர்வையை திரு அனிஷ் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதற்கு முன்பாக திருக் குடும்பத்தை நினைவூட்டும் வகையில் அமர்ந்திருந்த ஒரு குடும்பத்தாருக்கு ஆயர் அவர்கள் உணவு பரிமாறினார்கள். அதன் பின் ஆயர் அவர்களுக்கும் அனைத்து குருக்களும் பொது மக்களுக்கும் உணவு வழங்கப்பட்டது.



தக்காளி விளை மற்றும் பாத்திமாபுர பங்கு மக்களும் பங்கில் இருந்து திருமணமாகி சென்ற பெண்களும் பங்கை சுற்றி உள்ளவர்களும் பங்கு மக்களும் இத்திருவிழா நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பேராலயத்திற்கான தறி வைக்கப்பட்டது. 27 ஆம் தேதி 4 ஆம் வெள்ளி சிலுவை பாதை திருப்பலிக்கு பின்னர் ஆலயத்தைச் சுற்றிலும் நடத்தப்பட்டது. இறுதியில் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 28 ஆம் தேதி - மாலை 5:45 மணிக்கு நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து அருட்தந்தை பிலிப் பல்லோட்டி அவர்கள் ஒப்புரவு அருட்சாதனம் பெற மக்களை தயார் செய்தார்கள். பின்னர் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்பட்டது. இறுதியில் கொழுக்கட்டை சனியை முன்னிட்டு மக்கள் கொண்டு வந்திருந்த கொழுக்கட்டைகள் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. 29 ஆம் தேதி ஓசானா ஞாயிறு நிகழ்வுகள் காலை 7:00 மணிக்கு கன்னியர் இல்லத்தில் வைத்து ஆரம்பமானது. அங்கிருந்து பவனி காக்கவிளை சந்திப்பு வரை சென்று ஆலயம் வந்தடைந்தது.

### ▶ புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

மார்ச் 15 ஆம் தேதி அன்று திருப்பலி முடிந்தவுடன் பங்கு தந்தை ஜோஸ்மோன் அவர்களின் பெயர் கொண்ட விழா கொண்டப்பட்டன.

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

மார்ச் 1, 8 ஆகிய தேதிகளில் திருப்பணியாளர்கள் கூட்டம் பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றது. எல்லா வியாழக்கிழமைகளிலும் இளையோர்கள் சார்பாக ஆலயத்தில் சிலுவைப் பாதை நடத்தப்பட்டன. 10 ஆம் தேதி தவக்காலத்தை முன்னிட்டு வின்சென்ட் தே பவுல் உறுப்பினர்கள் சார்பாக கிள்ளியூர் முதியோர் இல்லம் மற்றும் கல்லுவிளை சென்றனர். 15 ஆம் தேதி பங்கு தந்தை அவர்களின்



பெயர்கொண்ட விழா கொண்டாடப்பட்டது. 20 ஆம் தேதி திருப்பயணம் மலையாற்றூர் வல்லார்பாடம் ஆகிய இடங்களுக்கு சென்றனர். 21 ஆம் தேதி பங்கு பேரவை உறுப்பினர்கள் சார்பாக பெருஞ்சிலம்பு சென்று பார்வையிட்டு சிறு உதவி கொடுக்கப்பட்டன. 28 ஆம் தேதி சனி திருப்பலி முடிந்தவுடன் அனைவருக்கும் கொழுக்கட்டை வழங்கப்பட்டன.

### ▶ புனித தேவ மாதா ஆலயம் கிள்ளியூர்

மார்ச் 15, திருப்பலி முடிந்தவுடன் பங்கு தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல் அவர்களின் பெயர் கொண்ட விழா கொண்டாடப்பட்டது. 21 ஆம் தேதி 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் சென்று சிலுவைப் பாதை நடத்தப்பட்டன. 30,31 1 ஆகிய தேதிகளில் தவக்காலத்தை முன்னிட்டு ஆலயத்தில் நற்கருணை ஆராதனை அருள்சகோதரி பிரிஜிட் தலைமையில் தபசு தியானம் நடைபெற்றன.

## படந்தாலுமூடு

### ▶ புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

மார்ச் 19 முதல் 22 வரை நான்கு நாட்கள் வருடாந்திர தியானம் நடைபெற்றது.

### ▶ புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் கழுவந்திட்டை

மார்ச் 8, மாதர்ஜோதிஸ் இயக்க உறுப்பினர்கள் திருப்பலி சிறப்பித்தார்கள். அன்றைய தினம் அருட்சகோதரி றெசி அவர்கள் தலைமையில் தாய்மார்கள் நம்பிக்கை ஆலயம் சந்தித்தார்கள். 8 ஆம் தேதி பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 18 மற்றும் 19 ஆகிய நாட்களில் அருட்தந்தை ஜோமி அவர்கள் தலைமையில் மலையாற்றூருக்கு திருப்பயணம் சொல்லப்பட்டது.

இதில் 98 பேர் கலந்து கொண்டார்கள். 26 ஆம் தேதி தவக்காலத்தை முன்னிட்டு காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை பாவசங்கீர்த்தனம் வழங்கப்பட்டது. எல்லா நாட்களிலும் மாலையில் திருப்பலி நடைபெற்றது. 29 ஆம் தேதி ஓசானா ஞாயிறு திருப்பலி நம்பிக்கை ஆலயத்திலிருந்து துவங்கப்பட்டு சுமார் 9 மணி அளவில் ஆலயத்தில் வந்தடைந்தது.

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

மார்ச் 21 தவக்காலத்தை முன்னிட்டு 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் செல்லப்பட்டது. 22 ஆம் தேதி திருப்பலிக்குப்பின் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. 29 ஆம் தேதி ஓசானா ஞாயிறு காலை 8:30 மணிக்கு SDS அருட்சகோதரிகள் இல்லத்தில் இருந்து குருத்தோலை பவனி தொடங்கி ஆலயத்தில் வந்து திருப்பலி நடைபெற்றது.

### புனித மரிய கொரற்றி ஆலயம் அதங்கோடு

மார்ச் 19 புனித சூசைப்பர் தினத்தை முன்னிட்டு காலை ஆடம்பரத் திருப்பலி நடைப்பெற்றது. 21 ஆம் தேதி திருப்பயணம் பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றது. 28 ஆம் தேதி புனித பவுல் ஆலயதில் மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கு நடைபெற்ற நாடக போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றார்கள். 29 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு அருட்சகோதரிகள் இல்லத்தில் இருந்து தொடங்கி பவனியாக வந்து ஆலயத்தில் திருப்பலி நிறைவடைந்தது.

## களியல் மறைவட்டம்

### புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி



மார்ச் 7 அன்று மாதர் ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட குழு களியல் மறைவட்ட செயலர் திருமதி நிஷா அவர்கள் வருகை புரிந்தார். 15 ஆம் தேதி

மறைக்கல்வி மாணவர்களுக்கான தேர்வுகள் நடைபெற்றது. 21 ஆம் தேதி 14 ஆலயத்திற்கு சிலுவைப்பாதை திருப்பயணம் நடைபெற்றது. 22 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்காக ஒரு சிறப்பு வகுப்பு நடைபெற்றது. அதில் 5 முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டார்கள். 27 ஆம் தேதி தவக்கால சிறப்பு பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. 29 ஆம் தேதி ஓசன்னா ஞாயிறு மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 9:30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மதியம் அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம், காரோடு

2026 மார்ச் 7, மாதர் ஜோதீஸ் இயக்க தாய்மார்கள் சார்பாக ஜெபப்பயணம் நடைப்பெற்றது. விடியற்காலை 3 மணியளவில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு மதுரை வாடிப்பட்டி ஆலயம் தொடர்ந்து அதை சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் உவரி போன்ற ஆலயங்களை பார்வையிட்டு தாய்மார்கள் இறையனுபவம் பெற்றனர். 19 ஆம் தேதி பங்கின் பாதுகாவலர் புனித சூசைப்பர் தினத்தை முன்னிட்டு மாலை 5.30 மணியளவில் ஜெபமாலை அதை தொடர்ந்து ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. 22 ஆம் தேதி ஞாயிறன்று திருப்பலிக்கு பிறகு அருட்சகோதரி சுஜி SDS அவர்கள் இறையழைத்தலுக்கான வகுப்பை நடத்தினார். இவ்வகுப்பில் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவிகள் பங்கெடுத்தனர்.

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை

பிப்ரவரி 5 ஆம் தேதி காலை 6 மணி முதல் மாலை ஆறு மணி வரை தொடர் ஜெபமாலை அதனை தொடர்ந்து திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. 14 ஆம் தேதி குழந்தை ஈசோ மாணவர்களுக்கான போட்டி காட்டத்துறை ஆலயத்தில் நடைபெற்றது. நமது மாணவர்கள் கலந்து கொண்டனர். 15 ஆம் தேதி குமரி வின்செந்தியன் கூட்டமைப்பின் வெள்ளி விழா நிறைவு நட்டாலம் புனித தேவசகாயம் திருத்தலத்தில் நடைபெற்றது. நமது வின்செந்தியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 22 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கத்தினருக்கான திரு விவிலிய வினாடி வினாப் போட்டி

நடைபெற்றது நமது பங்கை சார்ந்த திருமதி சுஜிதா அவர்கள் கலந்து கொண்டு முதல் பரிசுபெற்றார். மார்ச் 21 தவக்கால திருப்பயணம் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள ஆலயங்கள் நோக்கி அமைந்தது. மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பில் அனைத்து தாய்மார்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் சிலுவைப் பாதை பவனியும் திருப்பலியும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 24 ஆம் தேதி புனித வாரத்திற்கு தயாரிப்பாக ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது.

## புனித அந்தோனியார் ஆலயம் வயலங்கரை



மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் திருப்பலியைச் சிறப்பித்தார்கள். முஞ்சிறை அன்பகம் ஆதரவற்றோர் இல்லத்தை சந்தித்து அவர்களோடு பேசி உறவாடி உணவு உண்டு மகிழ்ந்தனர்.

## ஜெய மாதா ஆலயம் நித்திரவிளை

பிப்ரவரி 04,05,06 ஆகிய தேதிகளில் கேரளா மற்றும் நாகர்கோவில் பகுதியில் இருந்து வருகை தந்த பொதுநிலையினரால் பங்குகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் நற்செய்தி பரப்புதலின் ஒரு நிகழ்வான வீடு சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. 6 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நற்கருணை ஆராதனையுடன் வீடு சந்திப்பு நிகழ்வு நிறைவுற்றது. 14 ஆம் தேதி குழந்தை ஈசோ இயக்கம் குழந்தைகளுக்கான மறைவட்ட அளவிலான கலை விழா போட்டியில் குழந்தைகள் பலர் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். 15 ஆம் தேதி குமரி வின்செந்தியன் கூட்டமைப்பின் வெள்ளிவிழா நிறைவு புனித தேவ சகாயம் திருத்தலம் நட்டாலத்தில் நடைபெற்றது. வின்செந்தியர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 22 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பில் விவிலிய வினாடி வினா போட்டி நடைபெற்றது. போட்டியில் அனைத்து

தாய்மார்களும் கலந்து கொண்டனர். தவக்காலத்தை ஒட்டி ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை நிகழ்வு பங்கு அளவில் நடைபெற்றது. அதன்படியாக பரிகார சிலுவைப்பாதை நிகழ்வு நாற்பதாம் வெள்ளி மாலை அன்று நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் கஞ்சி பரிமாறப்பட்டது. இளையோர் அமைப்பினரும் இறை மக்களும் இணைந்து இந்த இனிய நிகழ்வை சிறப்பித்தனர். மாதர்ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக தவக்கால திருப்பயணம் மார்ச் மாதம் பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உச்சக்கடை புனித தெரேசா ஆலயத்தில் இருந்து தொடங்கி வெட்டுக்காடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நிறைவு பெற்றது. மறைகல்வி மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஊக்குவிப்பாளர் அவர்கள் 8 ஆம் தேதி வருகை புரிந்தார். 15 ஆம் தேதி மாணவர்களுக்கு இரண்டாம் பருவத் தேர்வு நடைபெற்றது.

## புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டு

பிப்ரவரி 01 காலை 8.00 மணிக்கு உறவிய பாதுகாவலரான புனித தேவசகாயம் பிள்ளையின் திருவிழாவினை முன்னிட்டு அன்றைய நாள் திருப்பலி எட்டாம் உறவிய மக்கள் சிறப்பித்தார்கள். மாலை 5.30 மணி அளவில் திரு வின்ஸ் அவர்களுடைய இல்லத்தில் உறவிய ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. 6 ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலியும் ஆராதனையும் நடைபெற்றது. அன்றைய நாள் தியானத்தை அருட்சகோதரர் ஜேம்ஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். அன்றைய நாள் பொது பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. 14 ஆம் தேதி குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற போட்டியில் குழந்தைகள் கலந்து கொண்டு மறைவட்ட அளவில் முதலிடம் பெற்றனர். 22 ஆம் தேதி மாதர்ஜோதிஸ் இயக்கத்தின் சார்பில் வினாடி வினாப் போட்டி நடைபெற்றது. சுமார் 15 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்று மதியம் இளையோர் இயக்க கூடுகை நடைபெற்றது. உலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு அருட்சகோதரி செல்வமேரி அவர்கள் தலைமையில் மார்ச் 8 கருத்தரங்கு நடைபெற்றது. 10 ஆம் தேதி மதியம் 1:30 மணிக்கு மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பில் புனிதப் பயணம் நடைபெற்றது. 15 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களின் இரண்டாம் பருவ தேர்வு நடைபெற்றது. 19 ஆம் தேதி மரியாயின் சேனை இயக்கத்தின் சார்பாக முன்சிறை அன்பாக

முதியோர்களை சந்தித்து அவர்களிடம் உறவாடி அவர்களுடன் மதிய உணவு உண்டு மகிழ்ந்தனர். 27 முதல் 29 முடிய மூன்று நாட்கள் வருடாந்தர தியானம் நடைபெற்றது. இவ்தியானத்தை அருட்தந்தை ஸ்டானிஸ்லாஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். தியானத்தின் இரண்டாம் நாள் புனித வாரத்தை முன்னிட்டு பொது பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா | திருமதி சினேக லதா**

## தென்காசி திருத்தொண்டுத்தளம்

### திருப்பயணம்

புளியரை சிறுமலர் தேவாலயம் மற்றும் புதூர் ஆலயத்திலுள்ள பங்கு மக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் மற்றும் அருட்தந்தை அனூப் ஆகியோர் இணைந்து மார்ச் மாதம் 8 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை உறுகுந்நு திருச்சிலுவை மலையில் ஏறிச்சென்று சிலுவைப் பாதை நடத்தினர். அந்த பங்கின் பங்கு தந்தை அவர்கள் தியான உரை வழங்கினார். இறுதியில் அவர்கள் உணவு தயாரித்து பரிமாறினார்கள்.

மார்ச் 7 ஆம் தேதி, சுந்தரபாண்டியபுரம் திருத்தொண்டுத்தளத்தைச் சேர்ந்த சுமார் 30 உறுப்பினர்கள் துத்துக்குடி, ஓரியர், சிவகங்கை, பூண்டி மற்றும் வேளாங்கண்ணி ஆகிய புனிதத் தலங்களுக்கு தவக்கால பயணத்தை மேற்கொண்டனர். திருப்பயணத்தின் போது, திருப்பலி நிறைவேற்றி, செபத்துடன் சிலுவைப் பாதையில் பங்கேற்றனர். 14 மற்றும் 15 ஆம் தேதிகளில் தியானம் அருட்தந்தை மிஜோ அவர்கள் வழிநடத்தினார். 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வாஞ்சி நகர் ஆலயத்திலிருந்து மார்ச் 13, 14 ஆகிய தேதிகளில் மலையாற்றூர் திருப்பயணம் நடத்தப்பட்டது. இந்த திருப்பயணத்தில் 40 பேர் கலந்துகொண்டனர் . தொடர்ந்து மார்ச் 14 வல்லார்பாடம் மற்றும் அர்ப்புங்கல் தேவாலயத்திற்கு திருப்பயணம் சென்று திரும்பினார்கள்.

## இளங்குருத்துவப் பட்டம்

முக்கூட்டுக்கல் இளம் குருமடத்தில் 2026 ஆண்டைய இளங்குருத்துவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

2026 மார்ச் 30 இல் புனித மரியன்னை இளம் குருமடத்தில் காலை 7:00 மணிக்கு அருள்சகோதரர் ஜோசப் ஜே.எஸ் (அபிஷ்வின்) அவர்கள் குருத்துவ திருஉடை பெற்றார். அருள்சகோதரர்கள் ஆண்டனி ராஜ், செபாஸ்டின் (சிபின் சி.கே.), மற்றும் செபாஸ்டியன் (மெல்வின்) ஆகியோர் கறோசூசா பட்டம் பெற்றனர். அருள்சகோதரர் சாலமன் (காட்வின் கிறிஸ்துதாஸ்) ஹொவ்பாதியாக்கனா பட்டம் பெற்றார்.

## திருத்தொண்டர் பட்டம்

2026 ஏப்ரல் 31 மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலயத்தில், மாலை 5:30 மணிக்கு அருள்சகோதரர் டெனிஸ் (திவின் ராஜ்) அவர்களுக்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கப்பட்டது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் அருட்தந்தை ஷிஜோ ஐக்காரகுந்நேல் ஆகியோர் திருப்பலிக்கு முன்னிலை வகித்தனர். குருத்துவ நிலைகளின் அனைத்து பட்டங்களையும் ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் வழங்கினார்.

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL 2026 | |
|---|---|
| MAR GEORGE RAJENDRAN SDB | 24 |
| FR. AMENTO EDAKKOOTTATHIL | 24 |
| FR. GEORGE KANDATHIL | 24 |
| FR. CHARLES MUNDAKATHIL CMI | 24 |
| FR. GEO CHOOZHIKUNNEL | 24 |
| FR. GEORGE KALANGARA SDB | 24 |
| FR. JOJO VARGHESE MATTATHIL CMI | 24 |
| FR.VARGHESE KOTTOOR CMI | 24 |
| FR.BIBIN K J | 24 |
| FR. SUMESH VALLIYAMTHADATHIL | 24 |
| FR. VIVEK KALARITHARA MCBS | 24 |

## MONTHLY AGENDA – APRIL 2026

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Wed | Recollection for Priests & Religious @ Kalluvilai |
| 2 | Thu | Pesaha Thursday |
| 3 | Fri | Passion Friday |
| 4 | Sat | Great Saturday |
| 5 | Sun | Easter Sunday: Resurrection of Our Lord |
| 7 | Tue | Priestly ordination - Dn. Bibin Vettakkonam |
| 8 | Wed | Priestly ordination - Dn. Bibin K J<br>KKSSS: Sidha Camp<br>HC: World Health Day Celebration and Volunteers Meet |
| 10 | Fri | FA: Marriage Preparation Course |
| 11 | Sat | KII: Committee Meeting<br>FA: Marriage Preparation Course<br>MJ: Diocesan Leaders Meet<br>TM: Mission Meet |
| 12 | Sun | URM: Parish Visit<br>CAT: Second Semester Examination (Std X, XI, XII)<br>VC: Vocation Promotors Visit – Padanthalumoodu Forane<br>SVP: AC Meeting |
| 14 | Tue | Birthday of Our Bishop Mar George Rajendran SDB<br>Priestly ordination - Dn. Tony<br>MS: Curia training at Manjalumoodu |
| 18 | Sat | CMC Vestition & First Profession<br>KKSSS: Vocational training for Students & Parents<br>ASc: Staff Day |
| 19 | Sun | CML: Nooru Meni MIG: Second Bangalore Sangamam |

| | | |
|---|---|---|
| 20 | Mon | ET: Mission Meet<br>KKSSS: Old Educare Students Get-together |
| 21 | Tue | FA: Doctor's Visit |
| 24 | Fri | St. George Patron's Day of Mar George Rajendran SDB<br>KKSSS: Awareness on Girl Child Day |
| 25 | Sat | SINAI: One Day Retreat<br>CAT: VPV Training<br>KII: Animators Meeting<br>PC: Gathering of the Media Team Members |
| 26 | Sun | World Prayer Day for Vocation<br>VC: Vocation Prayer and Awareness in all Parishes<br>URM: Uraviyam Organizers Meeting<br>CAT: Scholarship Examinations (Std III – Std IX)<br>CAT: VPV Begins at Parish Level<br>SMYM: Padanthalumoodu Unit Visit & Forane Gathering<br>MJ: Unit Visit<br>SVP: Youth Seminar |
| 28 | Tue | Priests' Conference |

FR. JOSE MUTTATHUPADAM, PROTOSYNCELLUS

## BISHOP’S ENGAGEMENTS - APRIL 2026

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 09.00 am | Kalluvilai: Recollection for priests and religious |
| 2 | Thu | 05.30 pm | Kunnuvilai: Pesaha Thursday Holy Qurbana |
| 3 | Fri | 11.00 am<br>02.00 pm | Muzhucode: Passion Friday Liturgy Karode: Way of the Cross |
| 4 | Sat | 10.00 pm | Mathapuram: Easter Qurbana |
| 5 | Sun | | Easter: Resurrection of our Lord |
| 6 | Mon | | Bishop’s House – Prayer Day >> Anchel |
| 7 | Tue | 09.00 am | Venchempu: Priestly ordination - Dn. Bibin Vettakkonam >> Idukki: Bishop’s House |
| 8 | Wed | 09.00 am | Thinkalkadu: Priestly ordination - Dn. Bibin K J |
| 9 | Thu | 06.30 am | Moolamattam: Remembrance Holy Qurbana\|Snehavilla |
| 10 | Fri | 06.00 pm | Pala: Centenary Birthday of Mar Joseph Pallikkaparampil |
| 11 | Sat | 09.30 am<br>06.00 pm | Trichy: Election Orientation Meeting<br>Angoorpalayam: Easter celebration >> Kanjirappally |
| 12 | Sun | | Thamarassery: Bishop’s House |
| 13 | Mon | | Mananthavady: Bishop’s House |
| 14 | Tue | 09.00 am | Sisumala: Priestly ordination Dn. Tony >> Thuckalay |
| 15 | Wed | | Bishop’s House: Benefactors visit |

| | | | |
|---|---|---|---|
| 16 | Thu | 9.00 am | Thuckalay: Curia Meeting |
| 17 | Fri | 10.00 am<br>05.00 pm | Mukkoottukal: Meeting the Major Seminarians with Curia Members<br>Mukkoottukal: Meeting with Vocation Camp Students |
| 18 | Sat | 09.00 am | Thuckalay: CMC First Profession |
| 19 | Sun | 04.00 pm | Mezhacode: St. Francis Year Inauguration Holy Qurbana |
| 20 | Mon | | Kamarajnagar: Holy Qurbana\|Major Seminarians Work Camp |
| 21-22 | Tue-Wed | | Palakkad: Father's Picnic |
| 23 | Thu | | Bishop's House |
| 24 | Fri | 08.30 am | Kamarajnagar: Last Day of Major Seminarians Work Camp |
| 25 | Sat | 06.00 pm | Anayadi: Feast Day Holy Qurbana |
| 26 | Sun | 10.00 am | Munchirai: Feast Day Qurbana & Solemn Holy Communion |
| 27 | Mon | 10.00 am | Utharamcode: Nidhi Blessing |
| 28 | Tue | 09.30 am<br>06.00 pm | Sangamam: Priests' Conference<br>Karode: Shrine Blessing & Holy Qurbana |
| 29 | Wed | 09.00 am | Bishop's House: Curia Meeting |
| 30 | Thu | 11.00 am | Thottaikadu: Solemn Holy Communion |

**FR. SUNIL ANTONY, SECRETARY TO BISHOP**

## MARCH 29

PALM SUNDAY HOLY QURBANA AT FATHIMAPURAM



ANNUAL DAY OF NAMBIKKAI ALAYAM AND KARUNAI ILLAM





## MARCH 26

BAPTISM AND CHRISMATION AT VIRUDHUNAGAR



## MARCH 12



**ST.ALPHONSA COLLEGE DAY AT SOOSAIPURAM**

## MARCH 16



**QURBANA AT VELLARADA KURISUMALA**

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570